விவசாயிகளுக்குப் பயன் தராது.—சிறு விவசாயிகளுக்கும் பெரு விவசாயிகளுக்கும் மான்ய விலையில் உரம், மருந்து போன்றவை கொடுக்கின்ற உதவியைச் செய்வதற்கான முறையிலே அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, வேறு திட்டங்கள் இருக்கின்றன. அவைகளின்மூலம் நாம் உதவியைச் செய்கிறோம். இந்தத் திட்டத்தின் மூலமாக வேளாண்மைத் துறையுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும், அவர்கள் பிரச்சினைகளைத் தெரிந்துகொள்ளவும் அதன் மூலம் நிவாரணம் பெற்றுத் தரவேண்டும் என்பதும் தான் இந்தத் திட்டத்தினுடைய முக்கியமான நோக்கம்.

மாமண்டூரில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவும் திட்டம்.

* வினா எண் 247—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மதுராந்தகம் வட்டம் மாமண்டூர் கிராமத்தில் Agro Industry மூலம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை துவக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மதுராந்தகத்தில் இப்போது அதைத் துவக்கும் உத்தேசம் இல்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதற்காக செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் மிகவும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அது மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால் அரசு இதை மீண்டும் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை இயக்குவது தமிழ்நாடு வேளாண் தொழில் கழகம். அவர்கள் இத்தகைய தொழிற்சாலைகள் போச்சம்பள்ளியிலும், நாமக்கல்லிலும் இருக்கின்றன. புதுக்கோட்டை மாவட்டத்திலே பூனக்குளத்திலே வேலை முடிவு அடையும் தறுவாயில் ஒன்று இருக்கின்றது. ஆகவே மதுராந்தகத்தில் துவக்கத் தேவையில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள்.

பருத்தி தீவிர சாகுபடித் திட்டம்.

* வினா எண் 248—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பருத்தி தீவிர சாகுபடித் திட்டம் தற்போது அமுலில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இதற்காக 1981–1982 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?